சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஆவணி 16
(1889)

பிரதி விலை: ரூபா 12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம் (HINDU ORGAN)

புத்தகம்: 113
சித்திரபானு வருடம் ஐப்பசித் திங்கள் 03ம் நாள்
(20.10.2002) ஐப்பசிப் பூரணை
இதழ்: 07

## யாழ் நகர மத்தியில் நிலைகொள்ளும் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைத் தலைமைச் செயலகம் இன்று மங்களகரப் புதுவிழா

## கேந்திர நிலையமாக வளர்ச்சியடைவதாக

**யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம் பிரதான வீதிகளில் ஒன்றாகிய பலாலி வீதியில் அமைந்துள்ளதோர் கட்டடத்தில் சித்திரபானு வருடம் ஐப்பசித்திங்கள் மூன்றாம் நாள் (20-10-2002) ஞாயிற்றுக்கிழமை (இன்று) பூரணைத் திருநாளன்று பூரண மங்கலப் பொலிவுகளுடன் திறந்து வைக்கப் படவுள்ளது.**

பத்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இந்து சமயப் பேரவைக்கு நிரந்தர செயலகமொன்று இல்லாதிருந்தமை பெருங் குறையாக இருந்தது. ஆரம்பத்தில் நல்லை ஆதீன கலா மண்டபமே பேரவையின் செயற்பாடுகளுக்கு நிலைக்களனாக அமைந்திருந்தது. பின்னர் கைதடி சைவச்சிறார் இல்லத்தைப் பேரவையினர் கையேற்ற காலம் முதல், பேரவையின் பெரும்பாலான செயற்பாடுகள் சைவச்சிறார் இல்லத்தை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாகச் சைவச்சிறார்கள் இல்லம் கைதடியிலிருந்து ஏழாலைக்கு இடம்பெயர வேண்டியேற்பட்டது.

யாழ் நகரத்துக்குச் சமீபமாயமைந்த மையப்பகுதியொன்றில் பேரவையின் தலைமைச் செயலகம் அமையாதிருந்தமை, அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குக் குந்தகமாக இருப்பது பலராலும் உணரப்பட்டது. இப்போது யாழ் நகரின் பிரதான வீதிகளில் ஒன்றாகிய பலாலி வீதியில் (கந்தர்மடம்) 51 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள போதிய இடவசதியுள்ள காணியையும் வீட்டையும் கொள்வனவு செய்து புனரமைத்து, அக்கட்டடத்தில் புகுவிழா நடைபெறுகிறது. இச்செயலகம் இந்து சமயத்தைப் பேணிப் பாதுகாக்கும் கேந்திர நிலையமாக நிலை பெற்று வளர்ச்சி காண வேண்டுமென்பதே சைவ நன்னெஞ்சங்களின் விருப்பமும் பிரார்த்தனையுமாகும்.

> அறிவுக் கறிவாகி யங்குமிங்கு மெங்கும்
> செறியு மொன் றேயெமக்குத் தேவு.
>
> - நற்சிந்தனை

# செய்தித் தொகுப்பு

**மெய்கண்டார் குருபூசை:**

ஐப்பசிச் சுவாதிப் பெருநாளாகிய ஐப்பசி 18 (04.11.2002)ஆம் நாள் திங்கட்கிழமை மெய்கண்டார் குருபூசை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ சித்தாந்த பண்டிதர் சங்கத்தின் ஆதரவில் அனுட்டிக்கப்படவிருக்கின்றது. விசேட பூசை, சிவஞானபோத சூத்திர பாராயணம், விரிவுரைகள் என்பன இடம்பெறும்.

**சைவநெறித் தேர்வு -2002**

சைவபரிபாலன சபையரால் வருடந்தோறும் நடாத்தப்படும் சைவநெறித் தேர்வு, இவ்வாண்டு 26.10.2002 சனிக்கிழமை 401 தேர்வு நிலையங்களில் நடைபெறவிருக்கிறது, ஆண்டு 2 முதல் 12 வரை பயிலும் சுமார் 72,000 மாணவர்கள் தோற்றுகிறார்கள். வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) சிலாபத்திலும் தேர்வுகள் நடைபெறும்.

**சைவபரிபாலனசபை நூலகம்**

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் தேர்வுக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டப நூல்நிலையத்தைப் பயன்படுத்தலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

**இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கான பயிற்சி வகுப்பு:**

இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கு வவுனியா மாவட்டத்திலிருந்து 28 மாணவர்கள் தோற்றுகிறார்கள். இவர்களுக்கான பயிற்சி வகுப்பொன்று வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான அறிவகக் கட்டட மேல்மாடியில் நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சி நெறியை 07.10.2002 திங்கட்கிழமை வவுனியா பிரதேச செயலர் திரு.சி.சத்தியசீலன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**சைவப்புலவர் வகுப்புகள்**

சைவப் புலவர் தேர்வுக்குரிய ஆயத்த வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகிறது.

**சைவசித்தாந்த பண்டிதர் தேர்வு -2003**

இத்தேர்வு 2003 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதல் வாரத்தில் நடைபெறுமென்றும் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் 30.10.2002 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உ

## சைவ சமயப் பெருநாட்கள்

*(ஐப்பசிப் பூரணை முதல் கார்த்திகைப் பூரணை வரை)*

| | | | | |
|---|---|---|---|---|
| ஐப்பசி 03 திகதி | 20.10.2002 | ஞாயிறு | - | பூரணை விரதம் |
| 06 திகதி | 23.10.2002 | புதன் | - | கார்த்திகை விரதம் |
| 08 திகதி | 25.10.2002 | வெள்ளி | - | சங்கடஹர சதுர்த்தி |
| 16 திகதி | 02.11.2002 | சனி | - | சனிப்பிரதோஷ விரதம் |
| 18 திகதி | 04.11.2002 | திங்கள் | - | அமாவாசை விரதம், தீபாவளி கேதாரகௌரி விரதம் |
| 19 திகதி | 05.11.2002 | செவ்வாய் | - | ஸ்கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 22 திகதி | 08.11.2002 | வெள்ளி | - | சதுர்த்தி விரதம் |
| 24 திகதி | 10.11.2002 | ஞாயிறு | - | ஸ்கந்தசஷ்டி விரதம் |
| கார்த்திகை 01 திகதி | 17.11.2002 | ஞாயிறு | - | கார்த்திகை மாதப்பிறப்பு, பிரதோஷ விரதம் |
| 03திகதி | 19.11.2002 | செவ்வாய் | - | பூரணை விரதம், திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், சர்வாலய தீபம். |

வாசகநேயர்கள் அனைவருக்கும் அன்பு நிறைந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

# மகேசுர வடிவங்கள்

(புத்தகம் 113, இதழ் 5 இன் தொடர்ச்சி)

9.சண்டேசானுக்கிரகர்:

சிவபெருமான் தனது பக்தகோடிகளுக்குத் தலைவனாக விளங்கும் சண்டேசுவரருக்கு அனுக்கிரகம் செய்தற்பொருட்டு கொண்டருளிய திருவடிவமே சண்டேசானுக்கிரக மூர்த்தம் ஆகும்.

சண்டீசர், பிரிங்கேசர், நற்றீசர் ஆகிய மூவரும் சிவனடியார்களில் முன்னிலை வகிப்பவர்கள். இவர்களுள் சண்டீசர் ஆதிதாசர் (மூத்த பக்தர்) எனப்படுவார். சண்டேச நாயனாரின் வரலாறு பெரியபுராணத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சண்டேசுர நாயனாருக்கு அனுக்கிரகம் புரிந்த தினத்தைத் திருமுறையாளர்கள் பலரும் போற்றிப் பரவியுள்ளதைக்காணலாம்.

**கடி சேர்ந்தபோது மலரான கைக்**
**கொண்டு நல்ல**
**படி சேர்ந்த பால் கொண்டல் காட்டி**
**டத் தாதை பண்டு**
**முடி சேர்ந்த காலையுற வெட்டிட**
**முக்கண் மூர்த்தி**
**அடி சேர்ந்த வண்ணம் அடியார்**
**கோலக் கேட்டு மன்றே**

என்ற சம்பந்தர் தேவாரம் சண்டேச நாயனாருக்கு அநுக்கிரகம் புரிந்த வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறது.

சிவானுபூதியில் திளைத்திருந்த சண்டீசர், தமது சிவபூசைக்கு இடையூறு விளைவித்தவரைத் தந்தையென்று வேறுபாடு காணாது புறந்தள்ளும் நேர்க்கோடு மழு ஆயுதத்தை வீசிய போது, அவனுக்கு சிவபெருமான் உலகமெல்லாம் வணங்குவதற்காக தமது ஆலயங்களிலெல்லாம் பொற்கோயிலும் தமக்கு அர்ப்பணிக்கப்பட்ட உணவுகளையும் உடைகளையும் அவருக்கே அளித்து தனது தலையிலணிந்திருந்த கொன்றை மாலையை எடுத்து சண்டீசரது தலையில் அணிவித்துச் சிறப்புச் செய்து சண்டீசர் என்ற தொண்டர்களுக்கெல்லாம் தலைவர் என்று பதவியும் அளித்துச் சிறப்பித்ததை,

**தாதையைத் தாளை வீசிய சண்டிக்**
**குண்டத்தொடுமுடனே**
**பூதலத்தோறும் வணங்கப் பொற்**
**கோயிலும் போகமும் அருளிச்**
**சோதி மணிமுடித் தாமமும் நாம**
**மும் தொண்டர்க்கு நாயகமும்**
**பாதகத் துக்குப் பரிசுவைத் தானு**
**க்கே பல்லாண்டு கூறுதுமே**

எனச் சேந்தனார் பெருமைப் பட்டுப் பல்லாண்டு பாடுகிறார். இந்நிகழ்வை சேக்கிழார் பின் வரும் பாடல் மூலம் எமது அகக்கண் முன் கொணர்ந்து நிறுத்துகிறார்.

**அண்டர்பிரானும் தொண்டர் தமக்க**
**தியனாக்கி அனைத்து நாம்**
**உண்டகலமு முடுப்பனவும் சூடுவ**
**னவும் உனக்காகச்**
**சண்டீசனுமாம் பதத்தந்தோ மென்**
**றங் கவர் பொற்ற**
**முடிக்குத்துண்ட மதிசேர்கொன்றை**
**மாலை வாங்கிச்**
**சூட்டினான் சிவபெருமான்.**

சண்டேசர நாயனாரது பெருமையை

**"பீரடைந்த பாலதாட்டப் பேணாத**
**வன் தாதை**
**வேரடைந்து பாய்ந்த தாளைவேர்த்**
**தடித்தான் தனக்குத்**
**தாரடைந்த மாலை சூட்டித்**
**தலைமை வகுத்த தென்னே**
**சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞ**
**ஞர் மேயவனே"**

எனத் திருஞானசம்பந்தப் பெருமானும்,

**"தழைத்ததோ ராத்தியின் கீழ்த் தாவர**
**மணலாற் கூப்பி**
**யழைத்தங்கே யாவின் பாலைக்**
**கறந்து கொண்டாட்டக் கண்டு**
**பிழைத்ததன் தாதை தாளைப்**
**பெருங்கொடு மழுவால் வீசக்**
**குழைத்ததோ ரமுத மீந்தார்**
**குறுக்கை வீரட்டனாரே"**

என அப்பரும்,

**"ஏத நன்னில மீரறு வேலி யேயர்**
**கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்**
**கோதனங்களின் பால்கறந்தாட்டக்**
**கோல வெண்மணற் சிவன்தன்**
**மேற் சென்ற**
**தாதை தாளை வெறிந்தசண் டிக்குன்**
**சடைமி சைமலரருள் செயக்கண்டு**
**பூதவாளிநின் பொன்னடி யடைந்**
**தேன்**
**பூம்பொ ழிற்றிருப் புன்கூருளானே"**

எனச் சுந்தரரும்

**"தீதில்லை மாணி சிவகருமஞ்**
**சிதைத் தானைச்**
**சாதியும் வேதியன் தாதைதனைத்**
**தாளிரண்டுஞ்**
**சேதிப்ப வீசன் திருவருளாற் தேவர்**
**தொழப்**
**பாதகமே சோறு பற்றினவா**
**தோணோக்கம்"**

என மணிவாசகப் பெருமானும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

இவ்வாறு சண்டீசருக்கு அநுக்கிரகம் புரிவதற்குக் கொண்ட கண்டேசானுக்கிரக மூர்த்தத்தின் அமைப்பு அஞ்சுமான் ஆகமத்தில் விபரிக்கப் பட்டுள்ளது. இம்மூர்த்தத்தில் சிவன் பார்வதிதேவியுடன காட்சிதருதல் வேண்டும். சிவனது ஒருகரம் அபய நிலையிலும் இன்னொரு கரம் சண்டீசரது தலைமேல் மலர்மாலையைக் கட்டுவது போன்றும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உத்தரகாமிகாமகத்தின் படி சண்டீசர் கரங்குவித்து வணங்கும் நிலையில் அமைதல் வேண்டும்.

காசியப்ப சிற்பம் என்ற நூல் சண்டேச அநுக்கிரக மூர்த்தத்தை தெட்சணாமூர்த்தி மூர்த்தத்துக்கு அடுத்துப் பிரபல்யம் வாய்ந்த மூர்த்தமெனக்

(12ம் பக்கம் பார்க்க)

# கலியுகவரதன்

கலியுகத்திற்குக் குகப் பெருமானே சிறந்த வரப்பிரசாதியான தெய்வம் என்று சாஸ்திரங்கள் விளம்புகின்றன. கந்தனைக் கரங்குவித்து வணங்குபவர்களுக்குக் கலியின் கொடுமையும் யமபயமும் கிடையாது என்பதை ஸ்காந்தம் "ஸ்கந்தஸ்ய அதுலாம் கீர்த்திம் கலி கல்மஷ நாசினீம்" என்றும், பழனி ஸ்தல புராணம் "கந்தனைப் போற்றுவோர் மேல் காலனும் அணுகொணாதே" என்றும் அறிவிக்கின்றன. உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் உயிராக விளங்கிச் செயலாற்றும் தெய்வம் ஒன்று உண்டு என வார்த்தைகளால் மட்டும் விபரித்தால் போதாது. அதனை மெய்ப்பிக்கும் வண்ணம் பக்தர்களின் அகத்திற்கும், புறத்திற்கும் தரிசனம் தந்து அவர்கள் வேண்டும் வரங்களை எல்லாம் கொடுக்கும் தெய்வம் முருகப்பெருமானே. முருகனே மெய்யான தெய்வம், கண்கண்ட தெய்வம் என்றெல்லாம் பாடுகிறார் குமரகுருபர சுவாமிகள்:

"ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப
தொருதெய்வ முண்டென வெடுத்
துரையாலுணர்த்துவதை யொழியவெவ
ரெவர்கட்கும்
ஊன்கண் ணுளக்கண்ணதாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்த
வர்கள்
வேண்டிய வரங்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்
புவியில் வேறில்லை."

- (முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் - அம்புலிப் பருவம்.)

இப்பெருமான் அடியவர்களைக் காக்க என்றும், எப்பொழுதும் ஆவலுடன் விளங்குவதை,

"நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமானே"

என்றும், பக்தர்கள் வாழுமிடமெல்லாம் தானே வலியத் தேடிச் சென்று அவர்களுக்கு அருள் புரிவதை,

"மாசிலடியார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடி விளையாடியே யங்ஙனே நின்று
வாழுமயில் வீரனே"

என்றும் திருப்புகழ் விளக்குகிறது. பக்தர்கள் எத்தனை பிழைகள் புரிந்தாலும், எத்தனை குறைகள் கருதினாலும், எந்தை முருகன் பொறுத்து மன்னித்துப் பிரியமுடன் வேண்டும் வரங்களை எல்லாம் நல்கி அருள் புரிவார்:

"மொழியும் அடியார்கள் கோடிகுறை
கருதினாலும்வேறு
முனிய அறியாத தேவர் பெருமாளே"

என்றும்,

"யார் வேண்டினாலும் கேட்டபொருளீ
யும்
தியாகாங்க சீலம்போற்றியும்"

என்றும் அருணகிரிநாத சுவாமிகள் பாடியுள்ளார்.

முருகப்பெருமானது திருவடிகளை நினைத்தால் போதும். உடனேயே அவரது திருமுகம் மகிழ்ச்சியால் மலர்ந்துவிடும்.

"அடியர் உள் நினைவது உன்னடி
ஒளியொடு குளிர்வது உன்மு
கம்"

- ஈசான தேசிக சுவாமிகள்.

அடுத்து, பக்தர்கள் தன்னை அழைக்கிறார்களா என்று ஆவலுடன் காத்திருப்பார் எம்பெருமான். நாமத்தைக் கூறி, 'அப்பா வா' என்று அன்புடன் அழைத்தால், ஓடோடி வருவார். வந்து அடியவர்களுக்குப் பல பேறுகளும் தருவதோடு அவர்களது பிறவியையும் ஒழிக்கும் பிள்ளைப் பெருமான் முருகன்.

"மருவுமடியார்கள் மனதினில்
விளையாடு
மரகதமயூரப் பெருமாள்காண்"

- அருணகிரிநாத சுவாமிகள்.

"பேரா தரிக்கும் அடியவர்தம் பிறப்பை
ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேரானா
பரவிப் புகழ்ந்து விருப்புடனப் பாவா
வாவென் றுனைப்போற்ற
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால் வாரா
திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே"

- பகழிக்கூத்தர்.

பேறுகள் தருவதோடு அடியவர்களுக்குக் காவலாகவும் இருந்து, அவர்களது குறைகளையும் போக்கி அவர்கள் தழைத்திடவும் எம்பெருமான் அருள் புரிவது நிச்சயம்.

"தொழுதுவழிபடு மடியர் காவற்காரப்
பெருமாளே."

- திருப்புகழ்.

"எத்தனை குறைகள் எத்தனை
பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை
செய்தால்
பெற்றவ னீகுரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்
தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட
வருள்செய்."

- கந்தர்சஷ்டி கவசம்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக இருக்கும் ஆறுமுகப் பெருமானது திருவுருவத்தைத் தரிசிப்பதையே நமது கண்கள் பெற்ற பயனாகவும், அவரது புகழைக் கேட்பதையே நமது செவிகள் பெற்ற பயனாகவும், அவரது நாமத்தைக் கூறுவதையே நமது நா பெற்ற பயனாகவும், அவரது திருப்பாதார விந்தங்களைத் தொழுவதையே நமது கைகள் பெற்ற பயனாகவும், அவரது தொண்டிற்கு ஆட்படுவதையே நமது மனம்,வாக்கு, காயம் முதலிய கரணங்கள் பெற்ற பயனாகவும் கருதி வழிபடவேண்டும். எம்பிரானைப் பற்றி நாம் பேசாத நாளெல்லாம் நாம் பிறவாத நாட்களேயாகும். இக்கருத்துக்களையே ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம் (சுலோகம் 26),

"த்ருசி ஸ்கந்தமூர்த்தி: ச்ருதௌ ஸ்கந்த
கீர்த்தி:
முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம்/
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய
ப்ருத்யம்
குஹே ஸந்து லீநா மமா சேஷபாவா://

என்று அறிவிக்கிறது. அருணகிரிநாத சுவாமிகள் கந்தரலங்காரத்தில் (பாடல் 60),

"சிந்திக்கி லேன்நின்றுசேவிக் கிலேன்
தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேன்ஒன்றும் வாழ்த்து
கிலேன்மயில் வாகனனைச்

(11ம் பக்கம் பார்க்க)

# சைவபரிபாலன சபை
# தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் - 24

(புத்தகம் 113 இதழ் 6 இன் தொடர்ச்சி)

**1898 ம் ஆண்டு FA பரீட்சை முடிவுகள்:**

யாழ் இந்துக் கல்லூரியில் கற்று கொல்கொத்தா கலை முதலாண்டு (F.A.) பரீட்சைக்கு 1898ஆம் ஆண்டு தோற்றியவர்களுள் அ. விசுவநாதன், C.G.கனிபோல்ஸ், சின்னக்குட்டி, க.ஆறுமுகம், V.M.சரவணமுத்து, சி. துரையப்பா, T.N. வேலுப்பிள்ளை ஆகிய அறுவர் சித்திபெற்றார்கள். அவர்களைப் பாராட்டும் அரங்கேறல் கொண்டாட்டம் 07.07.1898 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. திரு. அ. மயில்வாகனம், J.P. தலைமை வகித்தார். கல்லூரி அதிபர் நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள் துக்க சம்பவமொன்று காரணமாக விழாவுக்கு சமுகமளிக்கவில்லை. ஆசிரியர் வீ. கதிரவேற்பிள்ளை, B.A. அவர்கள் அதிபர் சார்பில் கூட்டத்தின் நோக்கம் பற்றிப் பேசினார்கள். பின் மாணவர்கள் ஒவ்வொருவரும் பேசினர். தமது ஆசிரியர்களுக்கு நன்றியும் பிரியாவிடையும் கூறினர். இறுதியில் நியாயதுரந்தரர் அ. கனகசபை, திருநாவுக்கரசு, கோமர் வன்னியசிங்கம், H.A.P. சந்திரசேகரா, சட்டத்தரணி திசைநாயகம், வண. நைல்ஸ், கச்சேரி முதலியார் S. பஸ்தியாம்பிள்ளை, இலங்கைநாயக முதலியார், கதிர்காமர் ஆகியவர்கள் கல்லூரி வளர்ச்சி பற்றியும் மாணவர்களின் தேர்ச்சி பற்றியும் புகழ்ந்தும் பாராட்டியும் பேசினர்.

**விசேட மகாசபைக் கூட்டம்:**

சைவ பரிபாலனசபைக்கு உதவிபுரிய வேண்டுமென்று பேரவாக் கொண்டிருந்த சில பிரபுக்களை இச்சபையின் அதிகாரசபை, நிருவாகசபை ஆகியவைகளில் அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்வதற்காகவும் சபையின் சட்டதிட்டங்கள் சிலவற்றை மாற்றுவதற்காகவும் சபையின் விசேட மகாசபைக் கூட்டமொன்று 1898ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஒன்பதாம் திகதி இந்துக் கல்லூரியில் கூடிற்று. அக்கூட்டத்திற்குச் சபையின் உபதலைவர் நியாயதுரந்தரர் திரு.அ. கனகசபைப்பிள்ளை தலைமை தாங்கினார். சபைச் செயலாளரும் உபசெயலாளரும் வருகை தராமையால் திரு.ச.சபாரத்தினம் (யாழ்ப்பாணக் கச்சேரி இரண்டாம் முதலியார்) செயலாளராகக் கடமையாற்றினார். கூட்டத்தில் பின்வரும் நான்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன:

அ) கல்லூரியை நடத்துவதற்காக ஏற்படுத்தப்படும் நிருவாக சபையில் கல்லூரி அதிபராகக் கடமையாற்றுபவர் பதவிவழி அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

ஆ) திருவாளர்கள் அ. கனகசபை, வை.சண்முகம், இ. அருளம்பலம், இ.மு.தில்லைநாதர், அ.கிருஷ்ணபிள்ளை, க.கா.கந்தையாபிள்ளை, கதிரவேற்பிள்ளை, T.விசுவநாதபிள்ளை, M. சிதம்பரநாதர், சு. சோமசுந்தரம், மு. சிவப்பிரகாசம், பொ.இராஜகோபால், இ. கதிரவேலு, S. செல்லப்பா, R. நாகலிங்கம், S. பொன்னுத்துரை என்பவர்களைச் சபையின் அதிகாரசபையில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அதற்கிசைய சபையின் சட்டதிட்டங்களைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இ) திருவாளர்கள் S.கனகரத்தினம், ச.சபாரத்தினம், S. நாகநாதர், அ.கிருஸ்ணபிள்ளை, இ.மு.தில்லைநாதர், வை.சண்முகம் ஆகிய அறுவரையும் நிருவாகசபையில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அதற்கிசைவாகச் சபைச் சட்டதிட்டப் பிரமாணங்களைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஈ) சபை அங்கத்தவர்கள் அனைவரும் 1898 ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் சபைக்குச் செல்லவேண்டிய தங்கள் கையொப்பங்களை (வாக்குப் பண்ணிய நன்கொடைப் பணங்களை) அந்த அந்த வருடத்தில் கொடுத்துவிடுதல் வேண்டும். அப்படிக் கொடாதொழியின், அவர்கள் சபை அங்கத்துவத்திலிருந்து நீக்கப்படுதல்

### பாராட்டி வாழ்த்துகிறோம்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர், சைவப்புலவர் செல்லையா திருநாவுக்கரசு (MA, Dip in Ed.) அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை உறுப்பினரும் சபை நடத்திவரும் சைவசமயபாடக் கருத்தரங்குகள், சைவநெறித்தேர்வுகள், சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுகள் என்பவற்றிற் கலந்து கொண்டு உதவி அளித்துவரும் சைவாபிமானியுமாவர். கலாநிதி திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் சைவசமய வளர்ச்சிக்கு ஊக்கத்துடன் செயலாற்ற எல்லாம் வல்ல சிவ பரம்பொருள் அருள்பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

உ
திருச்சிற்றம்பலம்

# கழையோடை வேற்பதிகம்

- தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் -

காப்பு

அஞ்சுமுகம் தோன்றினால் ஆறுமுகம் காட்டியருள்
தஞ்சவடிவேற் பதிகம் சாற்றவே - செஞ்சொல்
தருமாரண முதல்வன் சாரிடர்தீர்த் தின்பத்
தருவாரண முதல்வன் தான்.

நூல்

(1) அருளோங்கு ஞானவடிவான வைவேல்
ஆணவத்தின் பேரிருளை அகற்றும் வைவேல்
இருளோங்கு சூரனுரங் கீண்ட வைவேல்
எங்கெங்கும் இருவிழிக்குத் தோன்றும் வைவேல்
பொருளோங்கு மந்திரமாய்ப் பொலிந்த வைவேல்
பூங்கடம்ப மலர்மாலை புனையும் வைவேல்
தெருளோங்கு கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

(2) அருவினையும் மிடிபிணியும் அறுக்கும் வைவேல்
அமரர் கொடுஞ் சிறைமீட்ட அழகு வைவேல்
குருவருளும் பவ நெறியும் கூட்டும் வைவேல்
கொல்லவரும்எமனை அஞ்சக் குத்தும் வைவேல்
பருவரலும் பசிபகையும் பாற்றும் வைவேல்
பற்றற்றார் நெஞ்சகத்தே பற்றும் வைவேல்
திருவருள் சேர் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கைவேலே.

(3) பொல்லாத பாவங்கள் போக்கும் வைவேல்
புண்ணியங்கள் அத்தனையும் ஆக்கும் வைவேல்
எல்லார்க்கும் எவ்விடத்தும் அருளும் வைவேல்
இடர் வருங்கால் அஞ்சலென எதிர்க்கும் வைவேல்
இல்லாதார்க் கெப்பொருளும் ஈயும் வைவேல்
என்னுயிருக் குயிராகி இருக்கும் வைவேல்
செல்லாருங் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

(4) மாயவினைப் பெருமலையை இடிக்கும் வைவேல்
வஞ்சக ஆணவச்சூரை வதைக்கும் வைவேல்
தூய சுடர் ஒளியாகச் சூழும் வைவேல்
துன்பமுறும் காலத்தில் தோன்றும் வைவேல்
தாயனைய கருணையுடன் காக்கும் வைவேல்
தத்துவங்கள் அத்தனையும் கடந்த வைவேல்
தேய மகிழ் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

(5) ஆருயிருக் குயிராகி அமரும் வைவேல்
அன்பினிலே இன்புருவாய் அருளும் வைவேல்
வீரமலி சூரனை முன் வீட்டும் வைவேல்
விண்ணவர்கள் குடிமுழுதும் ஆண்ட வைவேல்
வாரி முழுவதும் வாரிக் குடித்த வைவேல்
வஞ்சனைகள் வாராமல் காக்கும் வைவேல்
சேருமருட் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே

(6) எத்திசையும் தானாகித் தோன்றும் வைவேல்
இரவுபகல் துணையாகி இருக்கும் வைவேல்
தத்துபுனற் பவப்புணரி தடியும் வைவேல்
சஞ்சலங்கள் பலகோடி தவிர்க்கும் வைவேல்
பத்தியடியார்களுடன் பயிலும் வைவேல்
பார்க்கின்ற இடந்தோறும் பார்க்கும் வைவேல்
சித்திதரும் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

(7) பொய்மை முதற்பல பாவம் போக்கும் வைவேல்
போகாத சிவஞானம் புரியும் வைவேல்
மைம்மலையும் வாரிதியும் அழித்த வைவேல்
வந்தவினை ஒருகோடி வதைத்த வைவேல்
தெய்வ மெல்லாம் தானாக நின்ற வைவேல்
தீராத கொடும் பிணிகள் தீர்க்கும் வைவேல்
செம்மையருட் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

(8) நாடிவருங் காலனையும் நலிக்கும் வைவேல்
நாதாந்தப் பரவெளியில் நடிக்கும் வைவேல்
ஓடுபுலன் ஐந்தினையும் ஒடுக்கும் வைவேல்
ஓங்கார வடிவாகி ஒளிரும் வைவேல்
வீடுதரும் மெய்யான வீர வைவேல்
வேதியனைச் சிறைப்படுத்தி மீட்ட வைவேல்
தேடுமருட் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

(9) தாங்கவொணாப் பிணி மிடியால் தூக்கப் பட்டுச்
சக்திவேல் சக்திவேல் என்று சாற்றி
நீங்காத பேரன்பால் உள்ளம் நெக்கு
நெக்குருகி விழிசொரிய நின்ற போதில்
ஓங்காரப் பேரொளியாய் உள்ளே தோன்றி
ஒன்றுக்கும் அஞ்சலென உரைக்கும் வைவேல்
தேங்கு மருட் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

(10) வீரவேல் கதிரைவேல் செந்தி வைவேல்
வெற்றிவேல் நல்லை நகர் மேவும் வைவேல்
தாரைவேல் அட்டகிரி தங்கும் வைவேல்
சண்முகவேல் கந்தவளம் சாரும் வைவேல்
பாரவேல் மாவைவேல் பபுளி வைவேல்
பரங்குன்றிற் பள்ளிருகைக் கோமான் வைவேல்
தீரவேல் கழையோடை திகழும் வைவேல்
சிவசிவ சங்கர முருகன் செங்கை வேலே.

# கந்தரனுபூதி

- திருமுருக கிருபானந்தவாரியார் -

சிவபரம்பொருளின் தொன்மை வடிவு ஆறுமுகவடிவம். தொன்மையும் நன்மையும் உடைய இந்த ஆறுமுக வடிவு அநாதியானது.

இறைவனுடைய ஐந்து திருமுகங்கள், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோ ஜாதம் என்பனவாகும். இவை முறையே ஆகாயம், கிழக்கு, தெற்கு,வடக்கு,மேற்கு என்ற ஐந்து திசைகளை நோக்கியுள்ளன.

ஈசானம்:
எல்லாவற்றையும் ஆளுந் தன்மையது.

தற்புருடம்:
தேவசரீரம் மானுட சரீரம் ஆகியவற்றில் அதிட்டித்து நிற்பது.

அகோரம்:
சாந்தமாக இருப்பது.

வாமதேவம்:
அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஆன்மாக்களுக்கு அருள வல்லது.

சத்யோஜாதம்:
உயிர்களுக்கு உடல்களைத் தோற்றுவித்து உள் தோன்றி அருளவல்லது.

இந்த ஐந்து முகங்களுடன், கீழ் நோக்கும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகம் ஆகி சிவம் உயிர்கட்குத் தனிப்பெருங் கருணை புரிகின்றது.

"ஐந்து முகத்தோ டதோமுகந் தந்து
திருமுகங்கள் ஆறாகி"

- கந்தர் கலிவெண்பா

இத்தகைய எந்தை கந்த வேளின் இன்னருள் பெற்றார் பலர். நக்கீரர் சிகண்டி முனிவர்,பொய்யா மொழி,ஔவையார், வசிட்டர் காசிபர், இடைக்காடர், சிதம்பர முனிவர், சிற்றம்பல நாடிகள் முதலிய பலப்பலர்.

இவர்க்குள் முருகவேள் மலர்வாக்கால் பிரணவமந்திர உபதேசம் பெற்றவர்கள் இருவர்களே. ஒருவர் அகத்தியர், மற்றொருவர் அருணகிரிநாதர்.

"எட்டிரண்டும் அறியாத என் செவியில்
எட்டிரண்டும் இதுவாம் இலிங்க மென
எட்டிரண்டும் வெளியாமொழிந் தகுரு முருகோனே"

- திருப்புகழ்

முருகப் பெருமானுடைய முழு முதற்றன்மையை முழு தொருங்குணர்ந்த முனீந்திரர் அருணகிரிப் பெருமான். இம்மாமுனிவர் அருணையம்பதியிலே பதினைந்தாம் நூற்றாண்டில் பிரபுடதேவன் காலத்தில் சிவஞான பாநுவாய் அவதரித்தவர். சைவ சமய குரவர்கள் நால்வர்க்கு பின் வந்த ஐந்தாவது குரவர் எனத் தெளிந்த சிவஞானிகளால் போற்றப்பெற்றவர்.இவருடைய பெருமை அளவிடற்கரியது.

அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள் ஆறு. திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேல்மயில் விருத்தம், கந்தரநுபூதி யென்பன.

இந்த ஆறு நூல்களில் கந்தரநுபூதி, வடிவத்தில் சிறியது. மகிமையில் பெரிய மந்திர சாத்திரம் ஆகும். இதன் பெருமையையுணர்ந்த தாயுமானார் கூறுவதைக் காண்க.

"கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடியிருக்குநாள் எந்நாளோ."

இது, அருணகிரிநாதர் வெறும் இலக்கண அறிவால் பாடியநூல் அன்று. கந்தருடைய அநுபூதியைப் பெற்றுக் கந்தரநுபூதியைப் பாடியருளினார்.

அருணகிரிநாதர் வேலவனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். "அப்பனே அடியேன் உமது பவளமனைய பாதமலரில் ஒரு மந்திரமலர்மாலை சாத்துமாறு அருள்செய். அம்மலர் மாலைக்கு என் மனமாகிய தாமரை குஞ்சமாக அமையவேண்டும். அன்பான நூலினால் தொடுக்க வேண்டும். நாவிலே அழகாகக்கட்ட வேண்டும். அதில் ஞானம் ஆகிய நறுமணங் கமழ வேண்டும், அம்மலர் மாலை ஒளிசெய்ய வேண்டும். குற்றமில்லாத அறிவு என்ற வண்டு அதில் ஒலிக்கவேண்டும். ஆறு ஆதாரங்களில் உள்ள அகாரம் முதல் க்ஷகாராம் ஈறாகவுள்ள மாத்ருகா மந்திரங்களாகிய ஐம்பத்தொன்றும் மலர்களாகத் திகழவேண்டும். இத்தகைய மந்திரமலர் மாலையை ஐயனே! உனது செய்ய பாதமலரில் புனைதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

"ஆசைகூர்பத்த னேன்மனோபத்ம
மான பூவைத்து நடுவேயன்
பானநூலிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி ஒருஞான
வாசம் வீசிப்ர காசியாநிற்ப
மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகாபுஷ்ப மாலைகோலப்ர
வாளபாதத்தில் அணிவேனோ"

- திருப்புகழ்

இந்த வேண்டுகோளின் படிதான் கந்தரநுபூதியென்ற செஞ்சொல் மலர்மாலையை வேலை யேந்திய விமலனுக்குச் சாத்தினார்.

| | | |
|---|---|---|
| மூலாதாரத்தில் | 4 | எழுத்துக்கள் |
| சுவாதிட்டானத்தில் | 6 | " |
| மணிபூரகத்தில் | 10 | " |
| அநாகதத்தில் | 12 | " |
| விசுத்தியில் | 16 | " |
| ஆக்ஞையில் | 2 | " |
| அதற்குமேல் | 1 | எழுத்து |
| ஆக | 51 | எழுத்துக்கள் |

"அகரமுதலென வுரைசெய் ஐம்பத்தொரட்சரமும்" என்ற திருப்புகழாலும் அறிக.

கந்தன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் உள.

1) கந்தன் பகைவர்களுடைய ஆற்றலை வற்றச்செய்பவன்,

(10 ம் பக்கம் பார்க்க

உ



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சித்திரபானு ஐப்பசி 03 (20.10.2002)


## இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியாக யாழ்நகரின் மையப் பகுதியில் பணிமனை அமைத்துக் கொண்டு இன்று அங்கு தனது பணிகளை ஆரம்பிக்க விருப்பது உண்மைச் சைவ இதயங்களுக்கு மகிழ்வு தரும் தித்திப்பான செய்தி. அந்நன்னெஞ் சங்களுடன் சேர்ந்து இந்து சமயப் பேரவையினருக்கு அவர்கள் பணி ஆல் போல் வேரூன்றி அறுகு போல் பரவ வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் இந்து சாதனம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறான்.

அவ்வாறு மகிழ்ச்சியடையும் வேளையில், சைவசமய நிறுவனங்களின் வரலாறுகளில் பொதுவாகக் காணப்படும் கவலைக்குரிய - மனத்தை நெருடுகின்ற - கசப்பான - உண்மையொன்றைச் சுட்டிக்காட்டி அவ்வாறான நிலைக்குட்பட்டுவிடாது இந்துசமயப் பேரவையை வளர்த்தெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு அதன் தற்போதைய நிர்வாகிகளுக்கு உண்டென்பதைச் சுட்டிக்காட்டுவது இந்து சாதனத்தின் கடமையாகும்.

நாவலர் காலத்தின் பின் சைவசமய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உருவான சமய நிறுவனங்கள் பலவும் ஒரு சில தசாப்த கால அளப்பருஞ் சேவையின் பின் தளர்வடைந்தன அல்லது செயலற்றுப் போயின - அல்லது குற்றுயிருடன் இயங்கின்றன என்பதுவே நாம் முன் குறிப்பிட்ட கவலை தரும் - ஆனால் மறுக்கமுடியாத - உண்மை. அவற்றிற்கான காரணங்கள் கசப்பானவை.

(அ) சைவசமய நிறுவனங்களுக்குள்ளே நிலவிய உட்பூசல்கள்.

(ஆ) தலைமைப் பதவிகளை அவாவிய சிலர் பிறிதொருவரின் தலைமையின் கீழ் நிறுவனச் செயற்பாடுகள் விருத்தியடைவதைக் காணச்சகியாதவராய் நிறுவனத்தின் செயற்பாடுகள் சீராக நடைபெற ஒத்துழைப்பதற்குப் பதிலாக முட்டுக்கட்டை போட்டமை.

(இ) பொறுப்பான பதவியிலிருந்தோரிற் சிலர் அப்பதவி தமது ஆயுள்வரை நீடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்பட்டமையும் தமக்குப் பின் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அர்ப்பணிப்புமிக்க இளந்தொண்டர்களைப் பயிற்றுவித்து தமது பணி தம்காலத்தின் பின்பும் தொடர்வதுடன் மட்டுமன்றி செழிப்படையவும் வேண்டுமென்ற நோக்கத்துடன் செயற்படாதுபோனமை. உடல் நிலை தளர்ந்த நிலையில் தமது பொறுப்புக்களையும் பணிகளையும் படிப்படியாக அப்பணிகளைச் செய்யக் கூடியவர்களிடம் காலாகாலத்தில் கையளியாமை.

(ஈ) சொத்துக்கள் சேர்ந்திருந்த நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளில் அமர்ந்திருந்தோரிடம், அச்சொத்துக்கள், தங்கள் நண்பர்களும் உறவினர்களுமான ஒரு சிறு கூட்டத்தாரின் கட்டுப்பாட்டிலேயே இருத்தல் வேண்டுமென்ற மனோநிலை உருவானமை காரணமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடிய உண்மைத்தொண்டர்கள் தாமும் தம் நிறுவனத்துள் புகுந்துவிடக்கூடாது என்ற வகையிற் செயற்பட்டமை.

(உ) ஆழ்ந்த சமய அறிவும் உணர்வும் பற்றும் தொண்டு மனப்பான்மையும் இல்லாதவர்கள்- பேர் புகழுக்காகச் சமயவாதிகளாகக் காட்டிக் கொண்டவர்கள் - சமய நிறுவனங்களின் பொறுப்பான பதவிகளைத் தம்கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொண்டு ஆக்க பூர்வமான நடவடிக்கையெதிலும் ஈடுபடாதிருந்தமை.

(ஊ) ஆழ்ந்த சமய அறிவும் சமய உணர்வும் பற்றும், தொண்டு மனப்பான்மையும் கொண்டவர்களின் கருத்துக்கள் மதிக்கப் படாது விடப்பட்டமையும் அல்லது ஏளனஞ் செய்யப்பட்டமையும்.

(எ) ஆழ்ந்த சமய அறிவும் சமய உணர்வும் பற்றும் தொண்டு மனப்பான்மையும் கொண்டவர்களையன்றி பெரும் பதவிகளில் உள்ளவர்களைச் சமய சம்பந்தமான விழாக்கள், கூட்டங்களில் தலைமை வகிக்கவும் பேசவும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் என்ற மகுடத்தின் கீழ் அழைக்கப்பட்டும், கௌரவிக்கப்பட்டும்

(09ம் பக்கம் பார்க்க)

# திருவருட்பயன் தொகுப்புரை

- சித்தாந்தசிகாமணி க. வச்சிரவேல் முதலியார்.

**இரண்டாம் அதிகாரம்:**

*உயிரவை நிலை:*

உயிர்கள் எண்ணிலா தவை; அவற்றுள் முத்திபெற்ற ஆன்மாக்களும் அளவில்லை, இனிப் பெறுதற்கு உரிய உயிர்களும் அளவில்லை. அவற்றை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூன்று வகையுள் வைத்து அறியலாம். எல்லா உயிர்களும் மூலமலம் எனப்படும் ஆணவமலம் உடையவை. பிரளயாகலர் ஆணவமும் கன்மமும் உள்ள இருமலத்தராவர். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றாலும் கட்டுற்றவர். எல்லா உயிர்களும் முதல்வனுக்கு அடிமைகளே ஆகும். சகலர்தாம் அடிமை என்பதை உணரார். ஏனையர் உணர்வர்.

உயிர்கள் அறிவுள்ளனவே ஆயினும், அவ்வறிவு நிலையானதன்று. நனவிற் கண்ட உண்மைகளைக் கனவு நிலையில் முற்றிலும் மறக்கும். நனவு நிலையிலும் ஐம்பொறி முதலியவற்றின் மூலமாகவே பொருள்களை அறியும்.

உயிரின் தன்மையைக் கண்ணின் தன்மையோடு ஒப்பிட்டு அறியலாம். இருள் பொருள்களைக் காணவொட்டாமல் கண்ணை மறைக்கும்; அதுபோல, ஆணவமலம் உயிரின் அறிவை மறைக்கும், ஒளி இருளை நீக்கிப் பொருளைக் காட்டும். அதுபோல, உடம்பும் ஐம்பொறி முதலிய கருவிகளும் ஆணவத்தால் வரும் மறைப்பை நீக்கி நம் அறிவை விளக்கும். முதல்வனது திருவருள் சூரியன் போன்ற பேரொளி ஆகும். அதைப் பெறும் நிலை உயிர்க்கு வரும்போது எல்லாப் பொருளும் இனிது விளங்கும்.

முதல்வன் மாறுதல் இல்லாதவன், ஆதலால் சத்து எனப்படுவன்; எக்காலத்தும் ஒரே தன்மைத்தாய் இருப்பது சத்து எனப்படும். உலகம் மாறுதல் அடைவது. ஆதலினால் அது அசத்து எனப்படும். சத்தாகிய முதல்வன் உலகத்தை அனுபவியான், உலகம் அறிவில்லது ஆதலால்; அது முதல்வனை அறியாது. சத்தையும் அசத்தையும் சார்ந்து அறிந்து நுகர்வது ஆன்மாவே யாம். சத்தைச் சார்ந்து சத்தாயும் அசத்தைச் சார்ந்து அசத்தாயும் நிற்கும் இயல்புபற்றி ஆன்மா சதசத்து எனப்படும். ஆன்மாவின் இயல்பை ஆகாயம், படிகம் என்பவற்றோடு ஒப்பிட்டும் அறியலாம்.

ஊமன் கண்ணுக்குப் பகலிலும் சூரியஒளி தெரியாது; அதுபோல, உயிர்கள் திருவருளாகிய ஒளியில் மூழ்கி இருப்பினும் அத்திருவருளைக் கவர முடியாதவையாய் உள்ளன. இதற்குக் காரணம் அவை அநாதியாகவே ஆணவத்தைப் பற்றி நிற்பதேயாம். ஆணவம் நீங்கித் திருவருளை உணரும்போதுதான் உயிர்க்குத் துன்பம் நீங்கிப் பேரின்பப் பேறு கிடைக்கும். *

(தொடரும்)

# இந்துசமயப் பேரவை

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைவசமயம் பற்றி யாரும் எப்படியும் எதுவும் பேசமுடியும் என்ற நிலையை ஒரு சில ஏற்படுத்த அதனைப் பலரும் பின்பற்றியமை. அதன் காரணமாகக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான உண்மைச் சமய உணர்வுகொண்டோரைத் தாமாகவே ஒதுங்கி வாழும் நிலையை ஏற்படுத்தியமை.

இவையும் இவை போன்ற இதர காரணங்களும் சைவசமய நிறுவனங்கள் பலவும் செயலற்றுப் போனமைக்கு அல்லது குற்றுயிருடன் இயங்குவதற்குக் காரணமாக அமைந்தன என்பது கசப்பான உண்மை. இவ்வாறான நிலைக்கு எமது சமய நிறுவனங்கள் மேலும் உட்பட்டு விடக்கூடாது என்ற மன ஏக்கத்துடனும் அவை வளர்ச்சியுற வேண்டுமென்ற மனப்பூர்வமான விருப்ப மேலீட்டாலுமே இவற்றை இங்கு கவலையுடன் சுட்டிக்காட்டினோம்.

இக்கசப்பான உண்மைகளை மறவாது மனத்திருத்தி சமய, சமுதாய வளர்ச்சியொன்றே குறிக்கோள் என்ற நோக்குடன் சமயப்பொதுப் பணிகளில் ஈடுபடும் அனைவரும் சுயநல நோக்கின்றி ஒற்றுமையுடன் செயற்படுவார்களானால் எமது நிறுவனங்கள் பெருவளர்ச்சி காண்பதில் தடையேதுமிருக்க முடியாது.

இந்து சமயப் பேரவையினர் மேற்கூறிய கசப்பான உண்மைகளை நினைவிலிருத்தி ஒற்றுமையுடன் செயற்பட்டு ஏனைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக நடந்து காட்டி நெடுங்காலம் பணியாற்ற எல்லாம் வல்ல ஆடல்வல்லான் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே.

— தாயுமானவர்

# கந்தரனுபூதி

(7ம் பக்கத்தொடர்ச்சி)

"ஸ்கந்தயதி சத்ருன் சோஷய தீதி. ஸ்கந்த:"

- வடமொழி அமரகோசவுரை

2) ஆறு திருமேனிகளும் ஒன்றாகப் பொருந்தினவன்.

எந்தை சக்திகள் உயிரெல்லாம் ஒடுங்குறும் எல்லை
முந்துபோல ஒன்றாகியே கூடிய முறைபோல்
அந்தமில்லதோர் மூவிரு வடிவம் ஒன்றாகி
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்

- கந்தபுராணம்

3) கந்து அன் கந்தன். கந்து - பற்றுக்கோடு. யானை கட்டும் தறி. ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாகத் திகழ்பவன்.

**அநுபூதி:** அநு - உடன், பூதி - ஆதல். ஆன்மா இறைவனுடன் ஒன்றாவது அநுபூதி. ஒன்றாவதால் உண்டாகும் அநுபவ ஞானம் ஆகும்.

எனவே ஆத்மா கந்தக் கடவுளுடன் ஒன்றுபட்டு (அத்துவிதமாகி) அதனால் விளையும் மெய்யுணர்வு எனவுணர்க.

"ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"

என்று இந்நூலில் 43வது திருப்பாடல் தெரிவிக்கின்றது.

ஞானம் மூன்று வகைப்படும். பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்பன.

வேதம், சாத்திரம், மிருதி, புராணம் முதலியவாயும், பிறவாயும், மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை ஆகிய பாசப் பொருள்களின் உதவியாலும் உண்டாகும் ஞானம் பாசஞானம் எனப்படும். அது பாசபந்தமாகிய பிறவியைத் தரும்.

மாயா காரியங்களாகிய மந்திரம், பதம், வன்னம் முதலிய இவ் வறுவகைப் பொருள்களின் தன்மையையுங்கண்டு, தான் இவற்றின் வேறாகிய பொருள் என்றும், தனது சொருபத்தை ஒருவாறு கண்ட போதும், பதியுண்மையையும், தனக்கும் பதிக்குமுள்ள தொடர்பையும், பசு எனப்படும் ஆன்மா உணராமையால், தான் பாசத்தின் வேறுபட்ட அறிவு சொருபமான பொருள் என்பதை மட்டுங்கண்டு, "நான் பிரமம்" என்று தருக்குற்று நிற்றல் பசுஞானமாகும்.

வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியாதித் திறங்கள் மேலாம்
நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
நணுகியான்மா இவைகீழ் நாடலாலே
காதலினால் நான்பிரமம் என்னும் ஞானம்
கருதுபசு ஞானம் இவனுடலில் கட்டுண்டு
ஓதியுணர்ந் தொன்றொன்றா உணர்ந் திடலாற் பசுவாம்
ஒன்றாகச் சிவனியல் பின் உணர்ந்திடுவன் காணே.

- சிவஞானசித்தியார்.

பாச ஞானத்தையும் பசுஞானத்தையும் அகற்றிப் பதியை அவனருளால் உணர்ந்து, அப்பரமன் அடிக்கீழ் நின்று உணர்தலே பதிஞானமாகும்.

"சீவனொடுக்கம் பூதவொடுக்கந்
தேற உதிக்கும் பரஞானம்"

- திருப்புகழ்

ஆகவே இச் சிவஞானத்தைத் தெளிவுறத் தெரிவிப்பது கந்தரனுபூதியாகும்.

கந்தரநுபூதி என்ற சொல் மூன்று வகையாகப் பொருள்படும்.

1) கந்தரைச் சேர்ந்து அடையும் அநுபூதி. "ஐ" என்ற இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலைத் தொடர்.

2) கந்தரால் அடையும் அநுபூதி. 'ஆல்' என்ற மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை நிலைத் தொடர்.

3) கந்தரின்கண் அடையும் அநுபூதி. "கண்" என்ற ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொடர்நிலை.

இனி இதன் பொருளை விளக்குதும்:

**1) கந்தரைச் சேர்ந்துஅடையும் அநுபூதி என்பது:**

இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் என்ற மூன்றையும் முறையே அடைந்து பக்குவப்பட்ட ஒருவர், எல்லாவுயிர்களும் தம்மைப்போல் இன்பம் அடைய வேண்டும் என்னும், கந்தக் கடவுளின் கருத்துக்கு இணங்க, அவரை அன்புடன் வழிபட்டு, தாம் வேறு கந்தக் கடவுள் வேறு என்னாது, உடலும் உயிரும்போல் அவருடன் கலந்து ஒன்றுபட்ட அத்துவித நிலையைக் குறிக்கும்.

**2) கந்தரால் அடையும் அநுபூதி என்பது:**

அங்ஙனம் ஒன்றுபட்ட அத்துவிதநிலையை அடைந்தவருக்குக் கந்தக் கடவுள், கதிரவன் ஒளியும், கண்ணொளியும் போல அவரின் வேறாய் நின்று தம்மையறிவித்துக் காட்டும் உதவிசெய்து பொருளால் வேறாய் நிற்கின்ற அத்துவித நிலையைக் குறிக்கும்.

**3) கந்தரின்கண் அடையும் அநுபூதி என்பது:**

அங்ஙனம் வேறாய் நின்று அறிவித்துக் காட்டும் உதவி செய்யப் பெற்றவரைக் கந்தக் கடவுள், உயிரறிவும் கண்ணொறியும் போல தம்மோடு உடனாய் நிற்கும் செயலிலுஞ் செலுத்திக்காணும் உதவி செய்து உடனாய் நிற்கின்ற அத்துவிதத்தைக் குறிக்கும்.

இங்ஙனம் கந்தரநுபூதி என்ற தொகைநிலைச் சொற்றொடர், மூவகைத் தொகாநிலைத் தொடர்களாய் விரிந்து பக்குவம் அடைந்த அடியார் ஒவ்வொருவரும், கந்தக் கடவுளும், கலப்பினால் ஒன்றுபட்டு நிற்கும் அத்துவித நிலையையும், பொருளால் கந்தக் கடவுள் அவருக்கு வேறாய்நின்று காட்டும் உதவியைச் செய்யும் அத்துவித நிலையையும், செலுத்தி நிற்குந் தன்மையால் கந்தவேள் அவரோடு உடனாய் நின்று காணும் உதவியைச் செய்யும் அத்துவித நிலையையும் குறித்து, அம் மூவகை அத்துவித நிலைகளாலும் அவர் அடையும் அநுபூதியாகிய பதிஞானத்தைக் குறிக்கும் எனவுணர்க.

(14ம் பக்கம் பார்க்க)

# கலியுகவரதன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்
கிலேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும்
போக்குதற்கே"

(புந்திக்கிலேசம் - மனத்திற்கு வரும் துன்பம். காயக்கிலேசம் - உடலுக்கு ஏற்படும் துன்பம்)எனப் பாடுகிறார்.

முருகப்பெருமானது திருவடிக்கமலங்களைக் கண்களால் கண்டு அன்பு மேலிட்டு இரு கரங்களாலும் தொழுது, எம்பெருமானது திருக்கோயிலைக் கால்களால் வலம் வந்து, அவரது நாமத்தை ஓதி உள்ளம் உருகி வேண்டி நின்றால் ஆறுமுக வள்ளல் திருவருள் துணைசெய்வது திண்ணம்:

"கண்ணால் உனது திருவடியைக்
கண்டா தரவு பெருகிஇரு
கையால் தொழுதுன்
திருக்கோயில்
காலால் வலஞ்செய்(து)
உனதுபுகழ்ப்
பண்ணால் உருகிப் புகழ்ந்து
கண்ணீ
பாயா எனையும் தாயாகப்
பரிந்து வளர்க்கும்
பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதி
வாழும்
அண்ணால் வருகஉலகம்முழு(து)
ஆண்டாய் வருக
கதிதரும்எம்
ஐயா வருக ஆறுமுக
அப்பா வருக விளங்குகதிர்
வண்ணா வருக மயில்ஏறும்
மன்னா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே."

- திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் (பாடல் 54.)

இப்பெருமானைப் போற்றியும் வழிபடலாம் வைதும் வழிபடலாம் எப்படி வேண்டுமானாலும் வழிபடலாம். எம்பெருமான் நினைவு மட்டும் இருந்தால் போதும். அவரது அருள் தானே நம்மை நாடி வரும். இத்தெய்வம் தன்னை வைதாரையும் அக்கணத்திலேயே, அந்த இடத்திலேயே வாழ வைக்கும் தெய்வமாகத் திகழ்கிறதென அருணகிரிநாத சுவாமிகள் போற்றியுள்ளார்.

"மொய்தார் அணி குழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப்
போன்வெய்ய வாரணம்போல்
கைதானிருப துடையான் தலைபத்
துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே."

- கந்தரலங்காரம், பாடல் 22.

(கருத்து: வேடர் குலக்கொடியாகிய வள்ளியம்மையை மணந்து கொண்டவனும்,கொடிய மதயானையைப் போன்றிருந்த இராவணனது பத்துத் தலைகளையும் கணையால் கொய்த இராமபிரானாகிய மகாவிஷ்ணுவின் மருமகனும், உமாதேவியின் புதல்வனும் ஆகிய முருகப்பெருமான் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழால் தன்னை வைதவர்களையும் அங்கு வாழவைப்பார்.)

"தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" எனப் பாடியது அருணகிரிநாத சுவாமிகளுக்குத் தமிழ்மொழியின்பால் இருந்த பற்றாலேயே ஆகும். இத்தெய்வம் யாவரும் வணங்கும் தெய்வம். தன்னை நினைப்போர் அனைவரையும் நொந்து மனம் வாடாமல் அல்லல் களைந்து ஆதரிக்கும் தெய்வம். எனவே, வைதவரையும் வாழவைப்பான் என்பதே கருத்து.

ஆறுமுகப் பெருமானை வைது கவிபாடி உய்ந்தவர் அம்பிகையின் அருள்பெற்ற கவி காளமேகம். எம்பெருமானின் பெருமையைக் குறித்து அவர் பாடுகிறார்:

"அப்பன் இரந்துண்ணி ஆத்தாள்
மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி -
சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறு
முகத்தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை."

பார்க்கும்பொழுது இப்பாடல் நிந்தையாகத் தோன்றிய போதிலும் உண்மையில் இது சிறந்த தத்துவப் பாடலாகவே விளங்குகிறது. முருகப்பெருமானின் தந்தையாகிய சிவபெருமான் கையில் திருவோடு ஏந்திப் பிட்சாடனராக விளங்குகிறார். இதன் பொருள் மக்கள் தங்களிடமுள்ள கோபம், குரோதம், ஆணவம் என்னும் முக்குணங் களையும் பிச்சையாகத் தந்து இறைவனிடமிருந்து அன்பை உணர்ந்து உய்ய வேண்டுமென்பதுதானே. "அன்பே சிவமாவது அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்று போற்றுகிறது திருமந்திரம். தாயாகிய சக்திதேவியோ மலையரசன் பெற்ற பாவை. கொடுமைகளைக் களையும் பொழுது கருணையுள்ள அத்தாய் கொடுநீலியாக மாறுகிறாள். இச்செயலைத்தானே பக்தர்கள் "பயங்கரி, ராட்சசி, பக்தர்களுக்கருளும் பரிபூரணானந்த சொரூபிணி" என்று துதிக்கிறார்கள். முருகனது தாய் மாமனாகிய கண்ணபெருமான் ஒப்புயர்வற்றவர். உறியிலிருக்கும் வெண்ணெயைத் திருடுபவர். இதன் தாத்பரியம் மக்களது உடலாகிய உறியிலிருக்கும் உள்ளமானது பக்தியால் வெண்ணையைப் போன்று இளகி வரும் பொழுது இறைவனே வலியவந்து கவர்ந்துகொள்கிறான் என்னும் உண்மையை உணர்த்துவது தானே. அடியார்களும் ஆண்டவனை 'உள்ளங்கவர் கள்வன்' என்றுதானே அழைக்கிறார்கள். சப்பைக்காலும் பெருவயிறும் கொண்டு அமர்ந்திருக்கும் விநாயகப் பெருமான் முருகனின் தமையன். இப்பெருமான் தனது பெருவயிற்றில் அண்ட சராசரங்களை எல்லாம் வைத்துக் காப்பாற்றுவதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. "விநாயகனே, விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும் ஆம் தன்மையினால், கண்ணிற் பணிமின் கனிந்து" என்று பாடியுள்ளார் கபில தேவர். எங்கேதான் எழுந்து அசைந்தால் தன்னுள் அடங்கியிருக்கும் சராசரங்களுக்கு ஊறு ஏற்பட்டுவிடுமோ என்னும் பெருங் கருணையினால்தான் கணபதி சப்பைக்காலுடன் அமர்ந்துள்ளார் என்று விளக்கம் தரப்படுகிறது. இத்தகைய பெருமையுடைய உறவினர்களின் தொடர்புடைய முருகனின் பெருமையை எழுத்துக்களாலும் வார்த்தைகளாலும்

(14ம் பக்கம் பார்க்க)

# மகேசுர வடிவங்கள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகிறது. காரணாகமும் மாயா மதம் என்கிற சிற்ப சாஸ்திர நூலும் சண்டீசரைப் பற்றிச் கூறுகின்றன.

கல்வெட்டு சாசனங்களில், சிவாலயங்களில் கொடுக்கல் வாங்கல் கணக்குகள் சண்டீசரது பெயரிலேயே நடத்தப்பட்டதாகக் கூறுகின்றன. அதாவது சண்டீசரே சிவாலயங்களின் முகாமையாளராகக் கொள்ளப்பட்டுள்ளார். இன்றும் சிவாலயங்களுக்குச் செல்லும் பக்தர்கள் வழிபாட்டின் இறுதியில் சண்டீசர் கோவிலுக்கு சென்று கைதட்டி வழிபட்ட பின்பே ஆலயத்தை விட்டு நீங்குவர். இதுதாம் ஆலயச் சொத்து எதனையும் தம்முடன் எடுத்துச் செல்லவில்லை என்பதை சண்டீசருக்கு அறிவிக்கும் செயற்பாடாகச் சில ஆய்வாளர்கள் கருதுவர்.

சண்டேசுரர் சிவபூசையின் இறுதியிலே பூசிக்கப்பட்டு சிவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிவேதனங்கள், மாலை, சந்தனம் முதலிய நிருமாலியங்களை ஏற்று, சிவபூசாபலத்தைக் கொடுக்கும் அதிகாரம் உடையவர். ஆகவே சிவவழிபாட்டின் இறுதியில் நிர்மாலியத்தை அவர்முன் சமர்ப்பித்து சிவத்தியானத்தில் இருக்கும் அவரைக் குழப்பாது மெதுவாகக் கைதட்டி அரட்டி அவரது கடைக்கண் பார்வை மூலம் சிவவழிபாட்டுப் பலனைப் பெறுதலே வழிபாட்டின் இறுதியில் கைதட்டிவழிபடல் எனக் கொள்ளப்படுகிறது.

கங்கை கொண்ட கோபுரத்தில் அமைந்துள்ள சண்டேசானுக்கிரக மூர்த்தி சண்டேசுவர மூர்த்தி நாயனாரின் கதையை உருவகப்படுத்தும் மிக அழகிய வடிவமாகும். இங்கு சிவன் சுகாசனமிட்டு உயர்ந்ததோர் ஆசனத்தில் மிகக் கம்பீரமாக (சோமாஸ்கந்த மூர்த்தத்திற்கு இருப்பது போல) அமர்ந்திருக்கிறார். அவரது இடதுகால் கீழே தொங்கிய நிலையில் காலைப் பொறுக்க வைக்கும் பீடமொன்றில் பொறுத்து நிற்கிறது. அதே ஆசனத்தில் சிவனுக்கு இடது பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். அவரது வலது கால், முழங்காலில் மடிக்கப்பட்டு, பாதம் ஆசனத்தில் பொறுக்குமாறு உயர்த்தி வைக்கப்பட்டுள்ளது. பார்வதிதேவியின் இடக்கால் கீழே தொங்கிய நிலையில் இன்னுமோர் காலைப் பொறுக்க வைக்கும் பீடமொன்றில் பொறுத்து நிற்கிறது. சிவனுக்கு நான்கு கரங்கள். பின்னங்கைகள் இரண்டிலும் மழுவும்மானும் தரித்துள்ளார். முன் கைகள் இரண்டும் சண்டீசரது திருமுடியில் மாலையைக் கட்டுகின்றன. சண்டீசர் நிலத்தில் சிவனது திருவடியில் முழங்காலை மடித்தும் கைகளைச் கூப்பிய நிலையிலும் அமர்ந்திருந்து நன்றியுடன் இறைவரது அருட்பரிசை ஏற்றுக் கொள்கிறார். மூன்று வடிவங்களுள் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

மாயமதன் என்ற சிற்ப சாஸ்திர நூற்படி, சண்டீசரின் கூப்பிய கரங்களுக்கிடையே மழு (பரசு) ஆயுதத்தை வைத்திருத்தல் வேண்டும். சிதம்பரம் கோவிலின் கிழக்குக் கோபுரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள சண்டேசானுக்கிரக மூர்த்திச் சிற்பத்தில் சண்டேஸ்வரர் கூப்பிய கரங்களுக்கிடையே மழுவை வைத்திருப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சண்டேசானுக்கிரக மூர்த்தம் சிவபூசையின் மிக்க புண்ணியமும் சிவத்துரோகத்தின் மிக்க பாவமும் இல்லை என்பதை உணர்த்துகிறது.

சக்கரப் பிரதர்:

இது அனுக்கிரக மூர்த்தங்களுள் ஒன்று. விஷ்ணுவுக்கு அநுக்கிரகம் செய்து அவருக்கு சக்கர ஆயுதத்தை வழங்கியதால் சக்கரப்பிரதர் எனவும் வைஷ்ணவ அநுக்கிரக மூர்த்தி எனவும் அழைக்கப்படுகிறார்.

விஷ்ணுவுக்கு சக்கரம் வழங்கிய கதை சிவபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. "மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்" என்பது சேந்தனா ரின் திருப்பல்லாண்டில் வரும் வரிகள். ஒரு சமயம் விஷ்ணுவினால் இரு சில அசுரர்களை வெற்றிகொள்ள முடியாதிருந்தது. அதனால் சிவனிடம் சக்கரா யுதம் வேண்டித் தவமிருந்தார். வழிபாட்டின் போது ஆயிரம் தாமரை மலர்களை உபயோகித்து அர்ச்சனை புரிந்தார்.

விஷ்ணுவின் பக்தியைச் சோதனையிடத் திருவுளங் கொண்ட சிவபெருமான், விஷ்ணு சேகரித்து வைத்த ஆயிரம் மலர்களில் ஒன்று குறைவடையுமாறு திருவுளம் பற்றினார். ஒரு மலர் குறையக்கண்ட விஷ்ணுவாலைத் உடனடியாகத் தமது கண் மலரொன்றைப் (கண்கள் எப்போதும் தாமரை மலரோடு ஒப்பிடப்படுவது வழமை) பறித்து அதைச் சினாருக்கு மலராக அர்ப்பணித்து ஆச்சித்தார். இதனால் திருவுளம் மகிழ்ந்த சிபெருமான் விஷ்ணுவுக்கு சக்கராயுதத்தை வழங்கி அருள் செய்தார்.

உத்தரகாமிகாமகத்தின் படி, சிவனுக்கு மூன்று கண்களும், நான்கு கரங்களும் இருத்தல் வேண்டும். தலையில் சடாமகுடம் தரித்து சாந்தமான நோக்குடையவராகக் காணப்படுதல் வேண்டும் பார்வதி தேவியார் இடப்பக்கத்தேயும் பிரம்மா வலப்பக்கத்தேயும் காட்சிதரல் வேண்டும். விஷ்ணு கூப்பியகரங்களுடன் காட்சி

(தொடரும்)




# சைவசமய பாடம் [7]

அன்புக் குழந்தைகளே,

சைவசமய பாடம் என்ற தொடரில் இவ்விதழில் பதி எனப்படும் இறைவன் எப்படிப்பட்டவர்அவருடைய திருவருளை எப்படிப் பெறலாம் என்பது பற்றிய விளக்கம் தரப்படுகிறது. வாசித்து சைவ சமய விளக்கம் பெறுவீர்களாக. அடுத்த இதழில் சந்திப்போம்.

– ஞானகுரு.

## பதி:

"கடவுள் சர்வவியாபகராய், சுத்தசத்தாய், சர்வசக்தியுடையவராய், சர்வவல்லமையுடையவராய், நிர்மலராய், பரிபூரணராய், சர்வஞ்ஞராய், பதியாய், நித்தியராய், சுவதந்திரராய் இருக்கிறார்."

கடவுள் ஒருவரே. அவர் எல்லா உயிர்களுக்கும் உயிராக இருக்கிறார். எல்லா உலகங்களிலும் இருக்கிறார். இவை எல்லாவற்றையுங் கடந்து அப்பாலுமாய் இருக்கிறார். அவர் எங்கும் உள்ளவர். கடவுளே எல்லாவற்றையும் நடத்துபவர். ஆதலால் அவர் எல்லாவற்றையும் அறிபவர். எல்லாம் அறிதல் **சர்வஞ்ஞத்துவம்** எனப்படும். அவர் காலதத்துவத்தைக் கடந்தவர் ஆதலாலும், இயல்பாகவே மலத்தினின்று நீங்கியிருத்தலாலும் என்றும் அறிபவராவர். என்றும் அறிதல் **அநாதிபோதம்** எனப்படும். அவர் எதையும் விசாரித்தறியாமல் நேரே இயல்பாக அறிபவராதலால் இயற்கையுணர்வு உடையவர். இயற்கை உணர்வு **நிராமயான்மா** எனப்படும். அவர் ஒரு காலமும் ஒருவிதமான குறையும் அல்லது தேவையும் இல்லாதவராதலால் நித்தியானந்தர் எனவும் நித்திய பரிபூரணர் எனவுங் கூறப்படுவர். நித்திய பரிபூரணம் திருப்தி எனப்படும். அவர் பிறருடைய எண்ணப்படி நடவாதவராய்த் "தாமார்க்குங் குடியல்லாச்சங்கர"னாய் பேரருளால் மற்றைய பொருள்கள் எல்லாவற்றையும் தம் வசப்படுத்தி நடத்துதலால் **சுவதந்திரர்**.

இந்தப் பெரிய பூமியோ, இதிலும் பன்மடங்கு பெரிதான சூரியனோ, சூரியனிலும் பெரிய நட்சத்திரங்களோ இவையெல்லாம் அவரையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. இந்த உலகங்களெல்லாம் அவராலே உண்டாக்கப்பட்டன, அவராலே நடைபெறுகின்றன. அவருடைய வல்லமைக்கு எல்லையில்லை. ஆதலால் அவர் **அநந்தசத்தியை** உடையவர். அவர் உயிர்கள்மேல் அளவில்லாத இரக்கம் உடையவர். ஆதலால் **அலுப்த சத்தியுடையர்**. அவர் மாயையினால் ஆக்கப்பட்டதேகம் இல்லாதவராய், தமது சத்தியாற் சுத்தமான வடிவங்கொள்பவர். ஆதலால் அவருக்கு விசுத்த தேகத்துவம் உண்டு.

மேலே கூறிய எட்டுக் குணங்களுள் நிராமயான்மா விசுத்ததேகத்துவம் என்னும் இரண்டையும் மற்றவற்றுள் அடக்கிக் கடவுளுக்குரிய குணங்களை ஆறாக்கிச் சொல்வதுமுண்டு. இந்த ஆறு குணங்களும் சுத்த சட்குணம் எனப்படும். இவற்றுள் சுவதந்திரம், அநந்தசத்தி ஆகிய இரண்டையும் சத் என்றும், சர்வஞ்ஞத்துவம், அநாதிபோதம் ஆகிய இரண்டையும் சித் என்றும், திருப்தி, அலுப்தசத்தி ஆகிய இரண்டையும் ஆனந்தம் என்றும் சுருக்கி மூன்று குணங்களாகச் சொல்வதுமுண்டு. இந்த மூன்றும் சச்சிதானந்தம் என்று தொடுத்துச் சொல்லப்படும்.

**குறிப்பு:**

புல்லறிவாளராகிய நாம் கடவுள் எப்படிப்பட்டவர் என்பதை அறியவேண்டியிருத்தலால், இவை குணங்கள் என்று ஒருவாறு வரையறுத்து இவ்வரையறை கற்பிக்கப்பட்டது. உள்ளபடி அவர் இக்குணங்களைக் கடந்தவர்." குணமொன்றுமில்லான்" என்பது திருவாசகம். சாத்துவிகம் முதலிய முக்குணங்களின் வசப்பட்டு நடவாத குணாதீதர் என்றறிக.

உலகத்திலே நாம் அறிகிற பொருள்களில் மரம், கல் முதலியவை ரூபமுள்ளன. காற்று, ஆகாயம் முதலியன ரூபமில்லாதன(அரூபம்). இப்படியான பூதப்பொருள்களுக்கு மாத்திரம் ரூபம், அரூபம் என்ற பேதம் சொல்லத்தகும். கடவுள் இவைகளைப் போன்ற பொருளல்லர். அவருக்கு ரூபம் அரூபம் என்ற பேதம் இல்லை. ஆனபடியால் அவர் ரூபியுமல்லர் அரூபியுமல்லர். அவர் ரூபியோ அரூபியோ என்று கேட்பது இராமாயணப் பிரசங்கம் ஒரு ஆட்சுமை இருக்குமோ? இராதோ? என்று கேட்பது போலாகும். இனி இவ்வளவு நுட்பமாகப்பாராது சொல்லுகில், அவர் அரூபியென்று சொல்லலாம். அவர் இன்ன குணமுள்ளவர் இன்னவிதமானவரென்று எங்கள் பொறிகளினாலாவது புத்தியினாலாவது அறிந்து கொள்ள இயலாது. அவர் நமக்குச் செய்யும் நன்மைகளால் நாம் அவருடைய தன்மையை ஒருவாறு அறியலாம். அவருடைய திருவருள் ஞானத்தால் மாத்திரம் அவர் இப்படிப்பட்டவரென்று உள்ளபடியே நாம் அறியலாம்

(15ம் பக்கம் பார்க்க)

# கந்தரனுபூதி

(10ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே கந்தரநுபூதி என்பது அத்தகைய மெய்யுணர்வைப் பற்றிக் கூறும் நூலுக்கும் பெயராய் அன்மொழித் தொகையாய் வந்தது.

மேலே கூறிய மூவகை அத்து விதங்களைச் சிவஞான போதம்,

"அவையே தானே யாயிரு வினை
யில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே"

என்ற சூத்திரத்தால் நுவல்கின்றது.

அவையே தானேயாய் என்ற சொற்றொடர், அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்று மூன்று வகைப்பட்டு நின்று பொருள் தருகின்றது.

"அவையேயாய்" என்பதனால் உடலின்கண் உயிர் நிற்கும்போது, உடல்வேறு உயிர்வேறு பிரித்துக் கூற முடியாது. உடலேயாய் இருப் பதுபோல், இறைவன் ஆன்மாக் களுடன் கலந்து பிரிப்பின்றி நிற்கின்றான்.

"தானேயாய்" என்பதனால், காணுந் தன்மையுள்ள கண்ணைக் காணச் செய்தற்கு, கண்ணின் வேறாய் கதிரவன் ஒளி உதவுவது போல், ஆன்மாக்களின் வேறாய் நிற்கின்றான்.

"அவையே தானாய்" என்பத னால், காணுந்தன்மையுள்ள கண் ணானது ஆன்மபோதம் இல்லாத போது காணுமாறு இல்லையா தலின், கண்ணுக்கு ஆன்மபோதம் எவ்வாறு உடன் நின்று உதவு கின்றதோ, அவ்வாறு உடனாய் நின்று இறைவன் அருளுகின்றான்.

"...... உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறவிவரும்
அத்துவித மாகும்
சிறப்பினதாய வேதாந்தத்
தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன் இங்குத்
தெரிக்க லுற்றாம்"

என்று சிவப்பிரகாசமும் இதனை வலியுறுத்துகின்றது. ஆதலால் கந்தரநுபூதியைக் காதலால் தினம் ஓதுவோர் கந்தவேளுடன் கலந்து அத்துவிதம் எய்திச் சிவஞானம் பெற்றுப் பேரின்பம் எய்துவர். *

# கலியுகவரதன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவது எளிதல்ல. அவருடைய திருவடிகளிலேயே நமது மனம் லயிக்கவேண்டும் என்னும் உட் பொருளுடன் இப்பாடலைக் கவி காளமேகம் இயற்றியுள்ளார்.

கவி காளமேகம் இரு பொருள்பட உரைப்பதில் வல்ல வர். ஆலகால விஷத்தை அருந்தித் தன்னையே தியாகம் செய்து தேவர்களுக்கு வாழ்வளித்தவர் சிவபெருமான். கருணையே உருவானவள் அம்பிகை. எளி மையே வடிவானவர் கண்ணன். ஆகவே தியாகத்தையும், கருணை யையும் எளிமையையும் கைக் கொண்டு, பக்தியுடன் எதற்கும் அசையாது கணபதியைப்போன்று அமர்ந்திருந்தால் இன்மயமான முருகனின் அருளைப் பெறலாம் என்னும் பேருண்மையையும் இப்பாடல் உணர்த்துவதாகக் கூற லாம். எவ்வாறாயினும் முருகப் பெருமானிடம் பக்தி செலுத்தி உய்ய வேண்டுமென்பதுதானே முடிவு!

"அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே."

- திருமந்திரம்.

உ

சைவ பரிபாலனசபை,
யாழ்ப்பாணம்

சைவசமய தீட்சை

ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை
(15.11.2002)

சபை நாவலர் ஆச்சிரம
மண்டபத்தில் இலவசமாக
வழங்கப்படும்

உ

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

சித்திரபானு ஐப்பசி 11உ

27.11.2002 புதன்கிழமை

கட்டுரைப் போட்டி:
17.11.2002

பேச்சுப் போட்டி:
24.11.2002

விபரங்கள் பாடசாலைகளுக்கு
அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# பதி:

(13ம் பக்கத் தொடர்ச்சி)

**தேவாரம்**

திருச்சிற்றம்பலம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி
னல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்ல
னோரூர னல்லனோ ருவம னில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி
னல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக்
காட்டொ ணாதே.

திருச்சிற்றம்பலம்.

அவருடைய திருவருளை நாம் பெறவேண்டுமானால் அவரிடத்தே இடையறாத அன்புள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்றார் மாணிக்கவாசகசுவாமிகள். நமக்கு இப்போதுள்ள பத்தியை வளர்த்துக்கொண்டு வந்தால் நாம் அரை அறியலாம்.

(தொடரும்)

# SAIVAISM

*(continued from page 16)*

prayer at Kataragma and Munneswaram in thousands. You cannot find such a scene in any other part of the world. This spirit of harmony and tolerance accounts for the pre sence of Skanda Shrines in Sinhalese places like Panadura, Kalutara, Galle and so on. There are Shrines for Skanda in many Buddhist temples as well. The Skanda Purana is too voluminous a work for discussion in a discourse like this. I wish to make merely a passing reference to the advent of Lord Skanda from the third eye of Siva to save the world from evil and doom. Six sparks emanated from Siva's third eye in the middle of the eye-brows, and they were taken care of by six nymphs (Karthi gai maidens) in the pond of Saravana, and when Parvathi, Siva,s Consort, handled them together, Skanda appeared as a baby with six faces.

Non-Hindus are perplexed and puzzled when they see the Hindu Gods and Godde sses with more than one face and many hands. They cannot easily grasp their true significance. A brief explanation is there fore considered essential at this point to clear all possible misunderstanding in your minds. According to the Chan dogya Upanishad, "The Infinite is below, above, behind, before, to the right, to the left." In other words, it sees all the four directions. and the upper and lower worlds. Lord Skanda's six faces represent this truth. In Skanda Purana, Lord Siva, who is described as the God with five faces, declares that Himself and His son, Skanda are identical, and that the latter has an additi onal face known as **Athomu kam**. **It is a** face looking down below, blessing the sinners, out-castes and down-trodden. This fact accounts for the worship of Skanda being so popular among the veddahs, hunters, fisherfolks and abori gines. He is their favourite God as witnessed at Kata ragama (South Ceylon) and Sella Sannithy (North Ceylon).

Skanda is reputed as a Lord of War, and Mars represents Him. Ares, son of Zeus and Hera, of the Greek mythology was identified by the Romans with Mars, whose worship spread through Macedonia to Thebes and Athens. There is another interesting legend which appears to be an echo of the story relating to Skanda's advent. I am mentioning it here just to remind you how certain religious principles and practices had been spreading from one culture to another, from one country to another. Plutarch tells us that Numa, the second king of Rome, appointed the ever-living fire to be worshipped as the first cause of all things. This is the same old -concept of Saivaism. If ever the sacred fire was allowed to go out, it could never be relighted from other fires, but must be taken direct from the rays of the sun by the Pontifix Maximus himself. The temple where this sacred Light was worshipped was served by the Vestal Virgins who had vowed to chastity. Both they and their chastity were highly revered and honoured. Stran gely enough, the number of Virgins at the temple of Vesta was six as in the case of Karthiga; maidens mentioned earlier. The said temple existed till Emperor Theodosius extinguished the fire and closed it in 394 A.D.

*( conclnded)*

# SAIVAISM

**- Late Mr. K.Ramachandra,Editor, 'Religious Digest'-**

(This Article is an abridged version of one of the eight discourses on Hinduism delivered by Late Mr.K. Ramachandra in Colombo in 1971 to Sixty four Roman Catholic Nuns. All the eight lectures were published in 1971 in England and Colombo under the title **'Hinduism in a Nutshell'** by Machandra Pablications)

In every Saivaite temple built according to Agamic injunctions, you will find Shrines for Lord Vigneshwara and Lord Skanda (Murukan in Tamil). They are called the sons of God Siva and His consort Paravathi. There are separate temples also for them in every village. Their worship is so popular. If we analyse life philosophically, we will find that it is the sum-total of the evolution of a problem, and its consequent solution. It is an unbroken chain of pro blems - evolved and solved. The power that controls life is the Lord of obstacles or Vigneshwara. Such a power must naturally be supreme, the lord of lords, and with no superior to control him. Hence he is known as Vinayaka. He must also be the most ancient one. So, he is addressed as Adhibhagawan. He is the first one that ever manifested in the mind, from the first word AUM, the sacred Mantra. I have already explained that Nadam or Sound is next to God. Spiritual scientists in ancient times meditated on the physical representation of the mystic word AUM and discovered that it resembled the head of an elephant. With the passage of time, the mystie significance became oblivious, the form of the word gained importance. He is also known as Ganapathy because he is the Lord of the five elements. I can only conclude that He is more real today than the mind which created Him. No Hindu religious worship or any ritual ceremony start without first invoking the blessing of Vinayaka. The following extract taken from a recent publication, Japasutram, by Swami Pratyagatmananda Saraswati of Calcutta, explains the deep significance of the mystic figure of Vinayaka:

"The mystic figure of Vinayaka or Ganesha is a living symbol or image of Omkara. Ganesha wears the head of an elephant and as such the trunk occupies a prominent position in the figure. This holds a deep significance. In the variously inspired images of Omkara, the trunk is found depicted in three different and distinct postures: sometime it is up-raised, sometime it hangs forwards in the natural manner and again it is shown in the middle as a double trunk in which the ends are curled up and down. The first symbo - lizes the movement of creation or evolution; the second that of dissolution or involution; and the third, the natural nexus or the ground of equipoise between the two."

The second son of Siva and Parvathi is called Skanda. Murukan is His most ancient name and He is also popularly known as Lord Subramaniya or Arumugaswamy. Skanda Purana deals with his advent and mission in a very elaborate manner and this Purana is available in both Sanskrit and Tamil languages. The Tamil version composed by Sri Kach chiyappasivacharya is as popular as the Periapuranam of Sekkilar and the Thiruvilaiyadal puranam of Paranjothi. in the Hindu educational system organi zed by the great Hindu reformer of Jaffna, Sri Arumu aga Navalar these three Tamil Puranas were taught In the schools and temples. The students learnt their Saivaism through them and the Thevaram, and Thiruvach sakam in the primary schools much more easily. That the worship of Murukan has been very popular in Ceylon from time immemorial is proved by the existence of the ancient Shrine of Kataragama. Not only the Hindus of all sects, but even Buddhists have been worshippers of Skanda. In fact, this worship has been for many centuries a unifying force. It is a sight for the gods to see and enjoy the way in which Hindus and Buddhists join together in

*(Continued on page 15)*

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K.K.S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S. Road, Jaffna 20.10.2002 (Full moon Day).